### குடிசை இல்லாத தமிழகம்

# ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டம்: இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள்

## ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.3.50 லட்சம் கிடைக்கும்

சென்னை, மே.29

**குடிசை இல்லாத தமிழகத்தை உருவாக்கும் விதமாக கலைஞர் கனவு இல்லம் திட்டம் அடுத்த மாதம் அமலுக்கு வருகிறது. இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்ட ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் கிடைக்கும்.**

தமிழக சட்டசபையின் 202425ம் நிதியாண்டிற்கான பட்ஜெட் அறிவிப்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் தொடங்கப்படும் என்று நிதி அமைச்சர் அறிவித்து இருந்தார். இந்த திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஊரக வளர்ச்சித்துறை கடந்த மார்ச் மாதம் வெளியிட்டது. இந்த திட்டம் ஏப்ரல் மாதம் முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்ற தேர்தல் காரணமாக தள்ளிவைக்கப்பட்டது.

அதற்கிடையில் இந்த திட்டத்தை அடுத்த மாதம் (ஜூன்) முதல் செயல்பாட்டுக்கு கொண்டு வர தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. அதாவது மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாள் அடுத்த மாதம் 3ந்தேதி கொண்டாடப்படுகிறது. அன்றைய தினமும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் அதனைத்தொடர்ந்து நடைபெறும் கருணாநிதி பிறந்தநாள் விழாவில் இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் 6 ஆண்டுகளில் மொத்தம் 8 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்த திட்டம் தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை இயக்குனர் பொன்னையா, அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி உள்ளார்.அதில் கூறியிருப்பதாவது:

குடிசை இல்லாத தமிழகத்தை உருவாக்கும் விதமாக கலைஞர் கனவு இல்லம் திட்டம் 202425ம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. முதல்கட்டமாக இந்த நிதியாண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு ரூ.3 ஆயிரத்து 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். குடிசையில் வாழ்பவர்கள், கேவிவிடி (கலைஞரின் வீட்டுவசதி திட்டம்) மறு சர்வே பட்டியலில் தகுதியானவர்கள் என குறிப்பிடப்பட்டவர்கள் இந்த திட்டத்தின் பயனாளிகள் ஆவர்.

ஒரு கிராமத்தில் ஏற்கனவே பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 25 முதல் 50 வீடுகள் கட்டுவதற்கு ஏற்கனவே ஒதுக்கீடு வழங்கப்பட்டு இருந்தால் அந்த கிராமத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை செயல்படுத்தக்கூடாது.

அதேபோல் ஒரு கிராமத்தில் கிராமப்புற வீடு திட்டத்தின் கீழ் 50 வீடுகளுக்கு மேல் பழுதுபார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தாலும் கலைஞர் கனவு இல்லம் திட்டம் செயல்படுத்தக்கூடாது. இந்த திட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்படுகிறது என்கிற விவரத்தினை 31ந் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**யாரெல்லாம் பயன்பெறலாம்?**

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு குறைந்தபட்சம் 360 சதுர அடி இடம் இருக்க வேண்டும். அதில் 300 சதுர அடி கான்கிரீட் கட்டிடம் கட்டவேண்டும். இந்த வீட்டின் சுவர் மண்சுவர் மற்றும் மண் சாந்து மூலம் கட்டக்கூடாது.

சொந்தமாக பட்டா வைத்திருப்பவர்கள் மட்டுமே இந்த திட்டத்தின் கீழ் வீடு கட்ட தகுதி யானவர்கள். புறம்போக்கு இடத்தில் கட்டப்பட்ட குடிசைக்கு பதிலாக இதில் வீடு கட்ட முடியாது. சொந்தமாக கான்கிரீட் வீடு இருப்பவர்கள் தகுதியற்றவர்கள்.

இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற குடிசை வீடுகளில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். குடிசையில் ஒருபகுதி கான்கிரீட், ஓடு, ஆஸ்பெட்டாஸ் சீட்டு இருந்தால் தகுதி பெற முடியாது.

வீடு கட்டுமான பொருட்களுக்கான சிமெண்ட் மற்றும் கம்பி வழங்கப்படும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒதுக்கீட்டு தொகை ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். அதில் ரூ.3 லட்சத்து 10 ஆயிரத்தை நிதியாகவும், கட்டுமான பொருட்களாகவும் தமிழக அரசு வழங்கும். மீதமுள்ள ரூ.40 ஆயிரத்தை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு 90 மனிதசக்தி நாட்கள் மூலம் ரூ.28 ஆயிரமும், ஸ்வட்ச் பாரத்தின் கீழ் கழிப்பறை கட்ட ரூ.12 ஆயிரமும் வழங்கப்படும்.

பயனாளிகளை ஊராட்சி மன்ற தலைவர், உதவி பொறியாளர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய மேற்பார்வையாளர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகியோர் கொண்டு குழு தேர்வு செய்யும்.

## புதிய பயண அட்டை கிடைக்கும் வரை அரசு பேருந்தில் மாணவர்கள் கட்டணமின்றி பயணிக்கலாம்

சென்னை, மே 29

தமிழகம் முழுவதும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களுக்கு பேருந்துகளில் பயணிப்பதற்கான கட்டணமில்லா பயண அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நடப்பாண்டுக்கான புதிய பேருந்து பயண அட்டைக்கான விவரங்கள் சேகரித்து, அச்சடித்து, லேமினேஷன் செய்து வழங்குதலில் உள்ள கால அளவு போன்றவற்றை கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கிடையே, வரும் 6ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது. எனவே, போக்குவரத்துத் துறையால் கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கும் வரை அரசு பேருந்துகளில் பள்ளி மாணவர்கள் சீருடை அல்லது பள்ளிகளில் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பழைய அடையாள அட்டையை நடத்துநர்களிடம் காண்பித்து கட்டணமின்றி பயணிக்கலாம்.

இதே நடைமுறை தொழிற்பயிற்சி நிலையம் உள்ளிட்ட மாணவர்களுக்கும் பொருந்தும். இது தொடர்பாக நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை மீறி சீருடையில் உள்ள மாணவர்களை அல்லது அடையாள அட்டைகளை வைத்திருக்கும் மாணவர்களை பேருந்தில் இருந்து இறக்கிவிட்டால் நடத்துநர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

---

### புகையிலை, நிக்கோடின் உள்ளிட்ட

# போதைப்பொருட்கள் எந்த வடிவில் வந்தாலும் விற்பனை செய்ய தடை: தமிழக அரசு அதிரடி உத்தரவு

சென்னை, மே.29

**தமிழகத்தில் புகையிலை மற்றும் நிக்கோடின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் எந்த வடிவில் வந்தாலும், அதனை உற்பத்தி மற்றும் விற்பனை செய்ய தடை விதிக்கப்படுகிறது என்று தமிழக அரசு அதிரடி உத்தரவிட்டுள்ளது.**

போதைப்பொருட்கள் பயன்படுத்துவதில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் உத்தர பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதன்பின் பஞ்சாப் மாநிலமும், அதன் தொடர்ச்சியாக ராஜஸ்தான், மராட்டியம், ஆந்திரா, தமிழகம், கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் வழக்குகள் பதிவாகின்றன.

அதில் அதிர்ச்சியான மற்றொரு தகவல் என்ன வென்றால் நாடு முழுவதும் 20 வயதிற்கு உட்பட்ட வர்கள் அதிக அளவில் போதைப்பொருட்கள் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை போதைப்பொருட்கள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து கொண்டே இருக்கிறது. அதனை கட்டுப்படுத்த தமிழக அரசும், தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

போதைப்பொருட்கள் இல்லாத தமிழகத்தை உருவாக்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தற்போது கூடுதல் கவனம் செலுத்தி பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்புகூட மதுரை ஐகோர்ட்டு, போதைப்பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு துணைபோகும் போலீசார் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

அதன் மறுநாளே, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தலைமை செயலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் போலீஸ் அதிகாரிகளுக்கு போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவது குறித்து சில உத்தரவுகளை பிறப்பித்தார்.

### போதைப் பொருட்கள் எதிரான நடவடிக்கை

அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் போதைப்பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. கடந்த 10 நாட்களில் மட்டும் சுமார் 1,000க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அதில் சிலர் மீது குண்டர் சட்டமும் பாய்ந்துள்ளன.

இதற்கிடையில் பான்மசாலா, குட்கா மட்டுமின்றி புகையிலை மற்றும் நிக்கோடின் கலந்து பல பொருட்கள், பல வடிவில் சந்தையில் விற்கப்படுவதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. எனவே இந்த அனைத்து பொருட்களுக்கும் தடை விதிப்பதாக தமிழக அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து உணவு பாதுகாப்புத்துறை மற்றும் மருந்து நிர்வாக கமிஷனர் ஹரிகரன் ஒரு அரசாணை வெளியிட்டுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

புகையிலை மற்றும் நிக்கோட்டின் கொண்ட உணவு பொருட்கள் தற்போது சந்தையில் வெவ்வெறு பெயர்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே அதனை பயன்படுத்தும் பள்ளி மாணவர்கள், சிறுவர்கள், இளைஞர்கள், கூலி தொழிலாளிகள் ஆகியோருக்கு உடல்நல பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 (மத்திய சட்டம் 34/2006) பிரிவு 30ன் உட்பிரிவு (2)ன் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழக அரசு புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த அனைத்து உணவு பொருட்களின் உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, வினியோகம் மற்றும் விற்பனை ஆகியவை முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

புகையிலை மற்றும் நிக்கோடின் சேர்க்கை கொண்ட பொருட்களான பான்மசாலா, குட்கா என எந்தவொரு பெயரில் இருந்தாலும், எந்த வடிவில் இருந்தாலும், எந்த சுவையாக இருந்தாலும், எந்த மணமாக இருந்தாலும் அவை முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

### ஓராண்டு அமல்

அதனை ஒரே தொகுக்கப்பட்ட அல்லது தொகுக்கப்படாத ஒரே தயாரிப்பாக விற்கப்பட்டாலும், அல்லது தனித்தனி தயாரிப்புகளாக தொகுக்கப்பட்டாலும் அதனை விற்பனை செய்யக்கூடாது. இந்த தடை உத்தரவு கடந்த 23 ந் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

இது எதிர்வரும் ஓராண்டு காலத்திற்கு அமலில் இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

VASTU HOUSING FINANCE

யூனிட் எண். 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட்,
ஜக்காரியா பண்டர் மார்க் சாலை செவ்ரி (மேற்கு), மும்பை 400 015, மகாராஷ்டிரா
CIN No.: U65922MH2005PLC272501

### சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள **வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் 19 ஜூலை 2023 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசை வெளியிட்டது. **கடன்தாரர் திரு/திருமதி. வீரபத்திரன் ஜி (விண்ணபதாரர்), திரு/திருமதி. சுகுனேஷ் வி (உடன் விண்ணபதாரர்),** கடன் கணக்கு எண். LP0000000105165 ஆகியோரை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 13 ஜூலை 2023 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை **ரூ.670988/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தியெட்டு மட்டும்)** மற்றும் மேலும் மேற்சொன்ன டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து முழு தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த அறுபது (60) நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால், கடன்தாரர், உத்தரவாததாரர் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13 (4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 9வது விதிமுறைக்கு இணங்கவும், 18.05.2024 அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரர்கள் குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் சொத்துக்களைக் கையாள வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் கூறப்பட்ட சொத்துக்கள் **வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்கு (சென்னை கிளை)** செலுத்த வேண்டிய தொகை **ரூ.670988/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தியெட்டு மட்டும்)** மற்றும் மேலும் வட்டி மற்றும் செலவுகளுக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித கையாளுலும் மேற்கொள்ள வேண்டாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**அசையா சொத்துக்கள் விவரம்**

படவேட்டம்மன் கோவில் தெரு, மெய்யூர் கிராமம், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு, தமிழ்நாடு 603102

**தேதி** : 18.05.2024
**இடம் : சென்னை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

---

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

kotak
Kotak Mahindra Bank

ஆன்லைன் இ- ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C- 27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

### அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)- ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ- ஏல விற்பனை அறிவிப்பு**

பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 05.04.2019 அன்று பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0517/392358ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திருமதி திருமதி. இந்துமதி மோகன் குமார் மற்றும் திருமதி. சரசு வாசுதேவன் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 10.03.2018 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.25,14,327.69/-(ரூபாய் இருபத்தைந்து லட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று இருபத்தியேழு மற்றும் அறுபத்தொன்பது பைசா மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்” வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 03.07.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை<br>5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | **ரூ.23,00,000/-** (ரூபாய் இருபத்து மூன்று லட்சம் மட்டும்) |
| டேவணித் தொகை டெபாசிட் (EMD) | **ரூ.2,30,000/-** (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்பிப்பதற்கான கடைசி தேதி | 02.07.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) |
| ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் | சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மேற்குப் பகுதியில் உள்ள மனை எண்.16A, விஸ்தீரணம் 720 சதுர அடி. அருள் நகர் லேஅவுட், லேஅவுட் அங்கீகார எண். CSAR.DTCP.M84265, LP.222, சர்வே எண்.2/5. இந்த சொத்தானது கூடுவாஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது மற்றும் நிலத்தின் எல்லைகள் : வடக்கு : 30 அடி அகல சாலை, தெற்கு : மனை எண். 16b, கிழக்கு: மனை எண்.16aன் மீதமுள்ள பகுதி மேற்கு: காலி நிலம், விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 32 அடி. வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 32 அடி. கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 19 அடி. கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 26 அடி. இந்த சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. |
| தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை | |

சர்பாசி சட்டப் பிரிவு 13—ன் உப பிரிவு 8—ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷியாம் நம்பூரி (+91 9677288418) & திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9152219751).** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bankauctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in—ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி:** 29.05.2024

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

---

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

kotak
Kotak Mahindra Bank

ஆன்லைன் இ- ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C- 27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

### அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)- ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ- ஏல விற்பனை அறிவிப்பு**

பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 05.04.2019 அன்று பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0716/304443 & HOU/CHE/0516/289859ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திருமதி திருமதி. இந்துமதி மோகன் குமார் மற்றும் திருமதி. சரசு வாசுதேவன் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 08.11.2018 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.78,63,370/-(ரூபாய் எழுபத்தெட்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முன்னூற்று எழுபது மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்” வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 19.06.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை<br>5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | **ரூ.48,00,000/-** (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சம் மட்டும்) |
| டேவணித் தொகை டெபாசிட் (EMD) | **ரூ.4,80,000/-** (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்பிப்பதற்கான கடைசி தேதி | 18.06.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) |
| ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். **சொத்து எண்.1:** 1176 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பிளாட் மற்றும் எண்.229, 3வது தளம் மற்றும் கார் பார்க்கிங் உட்பட. கட்டிடத்தின் பெயர் சாய் என்ஜினியரிஸ் அபார்ட்மெண்ட், அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் எஸ்.எண். 110/3ல் உள்ள 3 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் பகுதி 2 ஏக்கர் 75 செண்ட் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு நிலம் 588 சதுர அடியையும் உள்ளடக்கி உள்ளது. எல்லைகள் : கிழக்கு : கஜேந்திரனுக்குச் சொந்தமான மீதமுள்ள நிலம், மேற்கு: பாபா நகர் பூங்கா மற்றும் பாதை, வடக்கு: அரசுக்கு சொந்தமான பயன்படாத நிலம், தெற்கு: சர்வே எண்.110/4ல் உள்ள நிலம். இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். **சொத்து எண்.2:** 1176 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பிளாட் மற்றும் எண்.529, 3வது தளம் மற்றும் கார் பார்க்கிங் உட்பட. கட்டிடத்தின் பெயர் சாய் என்ஜினியரிஸ் அபார்ட்மெண்ட், அய்யஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் எஸ்.எண். 110/3ல் உள்ள 3 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் பகுதி 2 ஏக்கர் 75 செண்ட் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு நிலம் 588 சதுர அடியையும் உள்ளடக்கி உள்ளது. எல்லைகள் : கிழக்கு : கஜேந்திரனுக்குச் சொந்தமான மீதமுள்ள நிலம், மேற்கு: பாபா நகர் பூங்கா மற்றும் பாதை, வடக்கு: அரசுக்கு சொந்தமான பயன்படாத நிலம், தெற்கு: சர்வே எண்.110/4ல் உள்ள நிலம். இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. | |
| தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை | |

சர்பாசி சட்டப் பிரிவு 13—ன் உப பிரிவு 8—ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bankauctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in—ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி:** 29.05.2024

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

---

# மத்திய அமைச்சர் அமித்ஷா நாளை தமிழகம் வருகை: மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம்

சென்னை, மே.29

சாமி தரிசனம் செய்வதற்காக நாளை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழகத்திற்கு வருகிறார்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 19ந் தேதி தமிழகத்தில் நடைபெற்றது. அதற்கு முன்பதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு வந்து, பா.ஜ.க. வேட்பாளர்களுக்காக தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

கடந்த ஏப்ரல் 12ந் தேதி மதுரைக்கு வந்துவிட்டு பின்னர் ஹெலிகாப்டர் மூலம் சிவகங்கை செல்வதாக திட்டமிடப்பட்டு இருந்தது. அங்கு ரோடு ஷோ மூலம் பிரசாரம் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு இருந்தது.

மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலில் அவர் சாமி தரிசனம் செய்ய இருப்பதாகவும் கூறப்பட்டு இருந்தது. ஆனால் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா கொடியேற்றம் நிகழ்ச்சி நடந்ததால், பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணங்களுக்காக மத்திய மந்திரி அமித்ஷாவின் சாமி தரிசனம் நிகழ்ச்சி தள்ளிவைக்கப்பட்டது.

அதுபோல புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திலும் பைரவர் கோவில் சாமி தரிசனம் நிகழ்ச்சியும் தள்ளி வைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் நாளை (வியாழக்கிழமை) மத்திய அமைச்சர் அமித்ஷா தமிழகத்திற்கு வருகிறார். மதுரைக்கு வரும் அவர், மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். பின்னர் அங்கிருந்து திருமயத்திற்கு சென்று பைரவர் கோவிலில் சாமி தரிசனம் செய்கிறார்.

தஞ்சை பெரிய கோவிலுக்கும் அவர் செல்வதாக தகவல்கள் வந்துள்ளன. மத்திய மந்திரி அமித்ஷா வருவதைத் தொடர்ந்து போலீசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடியும் நாளை கன்னியாகுமரிக்கு வந்து, விவேகானந்தர் பாறை தியான மண்டபத்தில் 3 நாட்கள் தியானம் செய்ய உள்ளார். நாளை முதல் ஜூன் 1ந்தேதி வரை 3 நாட்கள் சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு கன்னியாகுமரி முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தங்கும் விடுதிகள், ஓட்டல்கள் போன்றவற்றில் போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்தில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அந்த பகுதி முழுவதும் மோப்ப நாய் மூலம் சோதனை மேற்கொண்டனர். நேற்று விவேகானந்தர் மண்டபத்துக்கு வந்த சுற்றுலா பயணிகளின் உடமைகளையும் போலீசார் சோதனை செய்தனர்.

---

Veranda

## வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

CIN:L74999TN2018PLC125880

**பதிவு அலுவலகம்: ஜி.ஆர்.காம்ப்ளக்ஸ், முதல் தளம், எண்:807-808, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600035**

### 31 மார்ச், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

| வ. எண். | விவரங்கள் | ஒருங்கிணைந்தது (ரூ.லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு 31 மார்ச் 2024 (தணிக்கை செய்யாதது) | முடிந்த ஆண்டு 31 மார்ச் 2024 (தணிக்கை செய்தது) | முடிந்த காலாண்டு 31 மார்ச் 2023 (தணிக்கை செய்யாதது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 10,390.80 | 37,001.74 | 4,880.02 |
| 2 | வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) | (3,934.36) | (8,125.84) | (4,302.20) |
| 3 | வரிக்கு முன் மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | (3,934.36) | (8,125.84) | (4,302.20) |
| 4 | வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | (3,854.17) | (7,611.17) | (3,867.85) |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது) | (3,467.99) | (7,213.18) | (3,843.37) |
| 6 | சம பங்கு மூலதனம் | 6,919.75 | 6,919.75 | 6,157.21 |
| 7 | இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு கையிருப்புகளைத் தவிர்த்து) முந்தைய கணக்கியல் ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பின்படி | | 30,785.81 | 24,436.94 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) | | | |
| | அடிப்படை | (5.93) | (12.05) | (6.28) |
| | பலமிழந்தது | (5.93) | (12.05) | (6.28) |

முக்கிய தனியான நிதித் தகவல்:

| வ. எண். | விவரங்கள் | தனியானது (ரூ.லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு 31 மார்ச் 2024 (தணிக்கை செய்யாதது) | முடிந்த ஆண்டு 31 மார்ச் 2024 (தணிக்கை செய்தது) | முடிந்த காலாண்டு 31 மார்ச் 2023 (தணிக்கை செய்யாதது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 2,141.06 | 5,814.61 | 655.35 |
| 2 | வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) | 750.07 | 2,049.65 | (529.54) |
| 3 | வரிக்கு பின் லாபம்/(நஷ்டம்) | 1,019.30 | 2,333.01 | (526.93) |
| 4 | மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 1,008.93 | 2,331.01 | (518.48) |

**குறிப்பு:**

1. மார்ச் 31, 2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 28, 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதிமுறை 33ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்டது. தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் முழு வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.verandalearning.com—ல் உள்ளது.

**வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக**
**கல்பாத்தி S. சுரேஷ்**
**நிர்வாக இயக்குனர் மற்றும் தலைவர்**
DIN: 00526480

**இடம் : சென்னை**
**தேதி : மே 28, 2024**